Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 31 2024

புதன்கிழமை ஜூலை 31, 2024 | ஒளி: 10 கதிர் 018 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## முட்டை இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி



இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்தால் இதுவரைக்கும் 224 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

ஐ.ஜி.பி பிரச்சினையை

# “தீர்க்கவும்”

பொலிஸ் மா அதிபர் (IGP) தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது.


பொலிஸ் மா அதிபர் இல்லாத காரணத்தினால் ஏற்படக்கூடிய நிறுவன ரீதியான இடையூறுகளை நிவர்த்தி செய்வதே கடிதத்தின் நோக்கம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பொலிஸ் மா அதிபரின் பற்றாக்குறை கவலையளிக்கும் அதே வேளையில், எதிர்வரும் தேர்தல்களை முன்னெடுப்பதற்கு இது ஒரு குறிப்பிடத்தக்க தடையாக கருதப்படவில்லை என அவர் தெளிவுபடுத்தினார்.

2024 ஜனாதிபதித் தேர்தல்

## திகதியை எவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானிக்கிறது

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நவம்பர் 17ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. இந்த நாளில் இருந்து 57 நாட்களுக்கு முன்னர், புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு, ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் கீழ் தீர்மானிக்கிறது. இந்தத் தேர்தல் குறைந்தது ஒரு மாதத்துக்கு குறையாமலும், ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு பிந்தாமலும் நடத்தப்படவேண்டும்.




தேர்தல் ஆணையத்தின் ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 16 நாட்களுக்கு குறையாமலும் 21 நாட்களுக்கு மிகாமலும் வேட்புமனு தாக்கல் செய்யும் திகதியை ஆணையம் நிர்ணயிக்க வேண்டும்.*

தரவு: தேர்தல் ஆணைக்குழு, செய்திகள்

# ‘ரணிலை சந்தித்தவர்கள் என்னையும் சந்தித்தனர்’’



ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக சென்ற சிலர் தனது வீடுகளுக்கு வந்து ஆதரவு தெரிவித்ததாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (30) காலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு விசேட கருத்து வெளியிடும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# வயநாட்டை புரட்டி போட்டது நிலச்சரிவு

கேரள மாநிலம் , வயநாட்டில், செவ்வாய்க்கிழமை (30) அதிகாலை ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 84 ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம், 100 பேருக்கும் மேற்பட்ட மக்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

தொடர்ச்சி P2

# காத்திருந்த இளைஞன் சடலமாக மீட்பு


சண்முகம் தவசீலன்



வெளிநாடு செல்ல காத்திருந்த இளைஞன் குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவமொன்று வடக்கில் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு யோகபுரம் மல்லாவி பகுதியினை சேர்ந்த ஆனந்தரசா ஜீவன் (வயது 27) என்ற இளைஞன், வெளிநாடு செல்ல காத்திருந்த நிலையில் வவுனிக்குளத்திலிருந்து செவ்வாய்க்கிழமை (30) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



பிரதமர், அமைச்சரவைக்கு

# நீதிமன்றம் அழைப்பு

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சரவையை உயர் நீதிமன்றம், தெளிவுப்படுத்தலுக்காக, அழைத்துள்ளது. இந்த அழைப்பு, திங்கட்கிழமை (29) விடுக்கப்பட்டுள்ளது.

முறைகேடான E- வீசா மோசடியினால் நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம்,

உல்லாசப் பயணிகள் வருகை போன்றவற்றிக்குப் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னரே இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது. மனுக்களை, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், பாட்டலி சம்பிக்க ரணவக்க, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தனித்தனியாகத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், ஆகஸ்ட் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென அறிவித்தது.

# “மீயுயர் சட்டத்தை மீறுகிறார் ஜனாதிபதி”



ஜனநாயகத்தின் 3 தூண்களுக்குமிடையே இருக்க வேண்டிய தடைகள் மற்றும் சமன்பாடுகள் உட்பட ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பும் முற்றிலுமாக சீரமிக்கப்பட்டு வருகின்றன. மறுபுறம் பாரிய குற்றச் செயல்களால் ஒட்டுமொத்த சமூகமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எமது நாட்டின் பொருளாதாரம், சமூகம், அரசியல், மதம் ஆகிய அம்சங்கள் முற்றாக சீரழிந்து வருகின்றன. நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பை பகிரங்கமாக மீறுவது, அரசியலமைப்புக்கு நாட்டின் ஜனாதிபதி பகிரங்கமாக சவால் விடுகின்றார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொலன்னறுவை மாவட்ட பிக்குகள் மாநாடு

தொடர்ச்சி P2

# ரணிலுக்கே சந்திரசேன ஆதரவு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்டக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களின் கணிசமான பகுதியினர் தீர்மானித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால செயலக இணையத்தளம்



உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ISTRM) உத்தியோகப்பூர்வ இணையத்தள அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

இடைக்கால செயலகத்தின் முன்னேற்றம் குறித்து அக்கறை காட்டுவோருக்கான பிரதான தகவல் மூலமாக இந்த இணையத்தளம் செயற்படும். இதுகுறித்த அறிக்கையை இந்த இணையதளத்தில் அறிந்துகொள்ள முடியும். 1983 - 2009 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மோதல் நிலைமைகள் தொடர்பில் நிலைமாறுகால நீதியை செயல்படுத்தல் மற்றும் அதன்போதான நீண்டகால பாதிப்புக்களுக்கு தீர்வுகளை வலியுறுத்தும் அறிக்கையும் இணைய பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# வயநாட்டை புரட்டி போட்டது நிலச்சரிவு

தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், பாலம் சேதம் அடைந்துள்ளதாலும் மீட்புப் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் 100-க்கும் மேற்பட்ட மக்கள் சிக்கித் தவிப்பதாகத் தெரிகிறது. அதேபோல் சூரல்மலா பகுதியில் பலரது நிலை என்னவானது என்று தெரியாத சூழலே நிலவுகிறது.

அத்துடன், தேயிலை மற்றும் ஏலக்காய் தோட்டங்களில் 600 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இவர்களில் 65 குடும்பங்கள் தேயிலைத் தோட்டத்தை ஒட்டிய ஓடை அருகே உள்ள லைன் வீடுகளில் வசித்துவந்தனர். இந்த லைன் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. இதனால் தேயிலை தோட்ட குடியிருப்பில் தங்கியிருந்தவர்களின் நிலை என்னவென்று தெரியவில்லை.

வயநாட்டின் சூரல்மலா பகுதியில் மட்டும் 400 குடும்பங்கள் சிக்கிக் கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அட்டமலா - முண்டக்கையை இணைக்கும் ஒரே பாலம் வெள்ளம், நிலச்சரிவில் சேதமடைந்த நிலையில் மீட்புப் பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

# காத்திருந்த இளைஞன் சடலமாக மீட்பு

20 இலட்சம் பணத்துடன் யோகபுரத்தில் இருந்து பாண்டியன் குளத்திற்கு திங்கட்கிழமை (29) பிற்பகல் சென்ற இளைஞன் இரவு 8.40 வரை நண்பர்களுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளதாகவும் பின்னர் அவரது தொலைபேசி வேலை செய்யவில்லை எனவும் அறியமுடிகின்றது.


குறித்த இளைஞனின் தொடர்பு கிடைக்காத நிலையில் அவனது நண்பர்கள் தேடியபோது செவ்வாய்க்கிழமை (30) அதிகாலை 3.00 மணியளவில் பாண்டியன்குளம் குளக்கரையில் மோட்டார் சைக்கில் இனங்காணப்பட்டுள்ளது.

அதன்பின்னர் தேடியதை தொடர்ந்து வவுனிக்குளத்தின் மூன்றாது நீர் சுருங்கையில் (நீர் கொட்டு) உடலம் இனங்காணப்பட்டு பிரதேச வாசிகளால் உடலம் மீட்கப்பட்டு வெளியில் எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பாண்டியன்குளம் பொலிஸார் நீதிபதி முன்னிலையில் உடலத்தினை மீட்டு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# முட்டை இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி



2024.03.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமே முட்டை இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 95 சத வீதமானவை லங்கா சதொச விற்பனை வலையமைப்பின் மூலம் 37 ரூபாவுக்கு நுகர்வோருக்கு விற்கப்பட்டது. முட்டை இறக்குமதிக்காக வழங்கப்பட்டுள்ள காலப்பகுதி 2024.04.30 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

அதற்கமைய, எதிர்வரும் ரமழான் மற்றும் நத்தார் கொண்டாட்டக் காலங்களில் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்துவதற்காகவும், கேக் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவை்யான முட்டைத் தொகையை இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ‘ரணிலை சந்தித்தவர்கள் என்னையும் சந்தித்தனர்”

இளைஞர்களுக்கு இவ்வாறான விடயங்கள் விசேஷமானவை எனினும் எனது தந்தை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்ற முதியவர்களுக்கு இவ்வாறான விடயங்கள் சகஜம் என தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, தான் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் முகாம்களை பாதுகாப்பதற்காக செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான முகாமில் இருப்பதால், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான வரலாற்று ரீதியான எதிர்ப்பை அது தொடர்ந்தும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்றார்

ஜனாதிபதித் தேர்தலில் தனது தந்தை இல்லாத காரணத்தினால் பொதுமக்களுடன் பேரம் பேசபடுவதாகவும், இந்த சந்தர்ப்பத்தை சிலர் விருப்பு சேகரிப்பு வாய்ப்பாக பயன்படுத்த தயாராக இருப்பதாகவும் தெரிகிறது என்றார்.

# “மீயுயர் சட்டத்தை மீறுகிறார் ஜனாதிபதி”

செவ்வாய்க்கிழமை(30) நடைபெற்றது அதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

பண்டைய காலத்திலிருந்தே, எமது நாட்டின் சமூக அமைப்பு பௌத்த கொள்கைகள் மற்றும் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டு வந்தன. அது தனிமனிதனிடம் தொடங்கி ஒட்டுமொத்த சமூகத்தின் மேற்கட்டுமானம் வரை நீண்டுள்ளது. ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்ட பரஸ்பர கடமைகள் எல்லோருக்கும் இருக்கின்றன. பெற்றோர்கள், பிள்ளைகள், மனைவிகள், தொழில்முனைவோர், ஊழியர்கள், நண்பர்கள், சாதாரண மக்கள், மத போதகர்கள் ஆகியோருக்கு இடையிலான முழு சமூக கட்டமைப்பும் பரஸ்பர கடமைகள் மற்றும் பொறுப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆனால் இன்று இந்த சமூக விழுமியங்கள், பரஸ்பர கடமைகள், சமூக பொறுப்புகள் போன்றவை கடுமையாக சவாலுக்கு ஆளாகியுள்ளன. மேலிருந்து கீழாக, கீழிருந்து மேல்வரை சவால் விடும் நிலை காணப்பட்டு வருகின்றன. இன்று நாட்டின் தலைவரான ஜனாதிபதியே மீயுயர் சட்டத்தை வெளிப்படையாக மீறி, நாட்டை வங்குரோத்தாக்கிய பொருளாதார குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து வருகிறார். அவர்களின் உதவியுடனும் தயவுடனும் மீண்டு ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார்கள். நாட்டை ஆட்சி செய்பவர் அநீதி இழைக்கும் போது, சட்டத்தை மதிக்காத போது, திருடர்களைப் பாதுகாக்கும் போது, ஆட்சியாளர் மேலிருந்து கீழ் வரை மோசமான முன்னுதாரணத்தை காட்டுவதாக குற்றஞ்சாட்டிய அவர், ஊழல், மோசடி, திருட்டு, சட்டமீறல் என அனைத்து ஒழுக்கக்கேடுகளும் மேலிருந்து கீழ் வரை பரவியுள்ளது என்றார்.



தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு:

# உதவியை இந்தியா இரட்டிப்பாக்கியது



இந்திய அரசின் 300 மில்லியன் ரூபாய்கள் உதவியுடன் தோட்டப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, 2019.06.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட விலை அதிகரிப்புகளால், குறித்த கருத்திட்டத்தின் நன்கொடையை 600 மில்லியன் ரூபாய்களாக அதிகரிப்பதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, ஏற்புடைய ஆவணங்களில் கையொப்பம் இடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# இடைக்கால செயலக இணையத்தளம்



இந்த விடயங்களை வர்த்தமானியில் அறிவித்து பாராளுமன்றத்தில் சமர்பிக்கும் முன்னர் அது குறித்து சகல தரப்பினரதும் இணக்கப்பாடுகள் மற்றும் திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட சமூகத்தில் பல்வேறு அமைப்புக்களிடமிருந்த பெறப்பட்ட மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் பல்வேறுபட்ட கருத்துக்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்குத் தேவையான ஆதரவை வழங்கக் கூடிய சூழலை ஏற்படுத்தும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் செயல்பட்டு வருகிறது.

# இலங்கை கிரிக்கெட்டின் புதிய யாப்பு சட்டமாகிறது

இலங்கை கிரிக்கெட் இற்கான புதிய யாப்பு வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதை சட்டமாக்குவதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டிருந்தது.

அந்த உப குழு அறிக்கையின் விதந்துரைகளுக்கமைய இலங்கை கிரிக்கட் இற்கான புதிய யாப்பு தயாரிப்பதற்காக ஓய்வுநிலை உயர்நீதிமன்ற நீதிபதி கே.ரீ.சித்ரசிறி தலைமையில் குழுவொன்று நியமிப்பதற்கு 2024.02.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த குழுவால் இலங்கை கிரிக்கெட்டுக்கான புதிய யாப்பு வரைவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

உத்தேச இலங்கை கிரிக்கெட் இற்கான யாப்பை முறைசார்ந்த வகையில் நிறைவேற்றிக் கொள்வதற்காக சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், மின் சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

Sri Lanka Cricket


# இன்ஃப்ளுவன்ஸா வேகமாக அதிகரிப்பு

இன்ஃப்ளுவன்ஸா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதனால், கொவிட் -19 தொற்றின் போது கடைப்பிடிக்கப்பட்ட சுகாதார பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றுமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்கள் மத்தியில் இன்ஃப்ளுயன்ஸா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து காணப்படுவதாக குழந்தை நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் முகக்கவசங்களை அணிய வேண்டும் எனவும் கை சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் குறிப்பாக பொது போக்குவரத்து மற்றும் சமூக கூட்டங்களின் போது சமூக இடைவெளியை பராமரிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மேலும் பாடசாலைகள், குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் இந்த வைரஸ் பரவுவதற்கான சூழ்நிலைகள் அதிகமாக காணப்படுவதனால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடல்நிலை தொடர்பில் எப்போதும் அவதானமாக இருக்குமாறும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.



குழந்தைகளுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை பாடசாலைகளுக்கு அனுப்புவதை தவிர்க்குமாறும் வைத்தியர் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை மாணவன் மீது தோட்ட அதிகாரி தாக்குதல்

## அமைப்பாளர் ரூபன் பெருமாள் கடும் கண்டனம்

இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல இ/நிரியெல்ல தமிழ் வித்தியாலயத்தில் சாதாரண தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர் மீது பாடசாலை நேரத்தில், தோட்ட கள அதிகாரிகள் தாக்குதல் நடத்தியதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமாள் கடுமையாக கண்டித்துள்ளார்.

சம்பவத்தை கேள்வியுற்று, பாடசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்களுடன் கலந்துரையாடியதுடன் இவ் விடயம் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு, குறித்த தோட்ட உத்தியோகத்தர்களை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி தோட்ட அதிகாரிக்கும் வலியுறுத்தினார்.

மேலும், இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேரையும் உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நிவிதிகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுத்தார்.

நிவித்திகல பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள தாக்குதலுக்குள்ளான மாணவனை சந்தித்து நலம் விசாரித்தார்.



# நியமனம்

■ எம்.யூ.எம் சனூன்

வடமேல் மாகாண ஆளுநர் நசீர் அஹமட்டின் புத்தளம் மாவட்டத்திற்கான இணைப்பு செயலாளராக, மதுரங்குளி விருதோடையைச் சேர்ந்த முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினரும், ஐ.தே.கட்சியின் வலய அமைப்பாளருமான ஏ.ஆர்.எம். ரபாத் அமீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்க பண்டார மற்றும் முன்னாள் சபாநாயகர் தேசபந்து கரு ஜயசூரிய ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க அவர் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



வடமேல் மாகாண ஆளுநரின் புத்தளம் மாவட்ட இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்ட முதல் சிறுபான்மை உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# உயிரை மாய்த்து கொண்ட முதியவர்

■ பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியை சேர்ந்த 80 வயதுடைய கந்தையா செல்லச்சாமி என்ற முதியவர் செவ்வாய்க்கிழமை (30) காலை தன் உயிரை மாய்த்து கொண்டுள்ளார்.

குறித்த முதியவரும் அவரது மனைவியும் சம்பவம் நிகழ்ந்த வீட்டில் வசித்து வந்துள்ள நிலையில் அவரது மனைவி செவ்வாய்க்கிழமை (30) காலை வெளியே சென்றிருந்த போது இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை



அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்



■ க. அகரன்

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவினர்கள் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, " காலம் தாமதிக்காது சர்வதேச நீதி கிடைக்க வேண்டும், தமக்கு நிதி தேவையில்லை நீதியே தேவை, காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடித்து தர வேண்டும் "என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பியதோடு பதாதைகளையும் தாங்கி இருந்தனர்.

# மரக்கறி தோட்டத்தில் குழி; ஐவர் கைது

■ எஸ்.கணேசன்

சட்டவிரோதமான முறையில் மாணிக்ககல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், சந்தேக நபர்கள் ஐவர் பொகவந்தலாவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரக்கறி தோட்டத்தில் சிலர் பாரிய குழிகள் தோண்டி சுற்றுச்சூழலை நாசம் செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஐவரையும் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைதானவர்கள், பலாங்கொடை, எல்பிட்டிய மற்றும் அனுராதபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட 34-45 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதுடன், பொகவந்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த மாணிக்ககல் அகழ்வில் ஈடுபடும் ஒருவரின் பின்புலத்திலேயே இந்த சட்டவிரோத மாணிக்ககல் அகழ்வு இடம் பெற்றுள்ளது.

# சந்தை கடை தொகுதியில் தீ

முல்லைத்தீவு நகர் பகுதியில் அமைந்துள்ள பிரதேச சபையின் பொதுச் சந்தை கட்டடத்தில் அமைந்துள்ள கடைத் தொகுதிகளில் மூன்று கடைகளில் செவ்வாய்க்கிழமை (30) அதிகாலை இடம்பெற்ற தீ பரவலில் பாரிய சொத்தழிவு ஏற்பட்டுள்ளது.

இரண்டு கடைகள் மற்றும் களஞ்சியம் ஒன்றும் இதன் போது சேதமடைந்துள்ளன. இரண்டு கடைகளும் முற்றாக எரிந்துள்ளதுடன் கடையில் உள்ள பொருட்கள் அனைத்தும் தீயினால் எரிந்து சாம்பலாகி உள்ளது.

காவலாளிகள் மற்றும் அதில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். இந்த தீ விபத்து



மின்சார கசிவால் ஏற்பட்டிருக்கும் என சந்தேகப்படுவதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# குளவி கொட்டு



■ ஏ.எச் ஹஸ்பர்

கிண்ணியா அல் அக்ஸா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் 40 மேற்பட்ட மாணவர்கள் செவ்வாய்க்கிழமை (30) அன்று குளவி கொட்டுக்கு இலக்காகி கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம் .எச். முஹம்மது கனி நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளார்.

# ஐஸ் நுகர்ந்த நால்வர் கைது

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் உள்ள நிறமூட்டும் தொழிற்சாலையில் நீண்ட காலமாக போதைப்பொருள் பாவனை நடைபெற்று வருவதாக பொலிஸாருக்கு திங்கட்கிழமை(29) இரவு இரகசிய தகவல் கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய செயற்பட்ட பெரியநீலாவணை பொலிஸார் அங்கு சென்று சோதனை மேற்கொண்டதுடன் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த 4 சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.



மேலும் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் 20, 18, 17, 17, வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருட்கள் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# முட்புதரில் சிறுமி; இளைஞன் கைது

சிறுவர் இல்லத்தில் வசிக்கும் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றஞ்சாட்டில் இளைஞனை மொனராகலை பொலிஸார் செவ்வாய்க்கிழமை (30) கைது செய்துள்ளனர்.

சிறுவர் இல்லத்தில் இருந்த 15 வயதான சிறுமி, சிறுவர் இல்லத்துக்கு அருகிலுள்ள தோட்டத்திலுள்ள வீடொன்றில் வசிக்கும் 28 வயதான இளைஞனுடன் காதல் உறவில் ஈடுபட்டு வந்துள்ளார்.

சிறுவர்கள் இல்லத்தில், அச்சிறுமியை கடந்த 26ம் திகதி காணவில்லை. அதனையடுத்து தேடியபோது, முட்புதரில் இளைஞன் ஒருவருடன் இருந்துள்ளார்.

சிறுமியுடன் இருந்த சந்தேக நபர் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தது தெரியவந்துள்ளது.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவ்விளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# “கூட்டணியாக செயற்பட தீர்மானம்”

■ எஸ்.கணேசன்

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும், இலங்கை விவசாயிகள் சங்கமும் ஒன்றாக இன்று சங்கமித்து உள்ளன. எனவே, இனிவரும் காலப்பகுதியில் அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் இந்த கூட்டணி தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும் - என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நுவரெலியாவில் செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்...

“ மலையகத்திலே இன்றைய தினம் பாரிய புரட்சி ஏற்பட்டுள்ளது. அதாவது பாரிய தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும், நுவரெலியா மாவட்டத்தில் மிக கூடுதலான விவசாயிகளை கொண்ட பழமையான தொழிற்சங்கமான இலங்கை விவசாயிகள் சங்கமும் ஒன்றாக சங்கமித்துள்ளன.

இலங்கை விவசாயிகள் சங்கத்தில் 10,000 வரையிலான அங்கத்தவர்கள் உள்ளனர், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் 11 மாவட்டங்களில் 2,75000 க்கும் 3 லட்சத்துக்கும்



இடைப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. எனவே, எமது வசம் வாக்கு வங்கியும் உள்ளது. இது பாரிய புரட்சியாகும். நாம் கூட்டணியாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளோம். இலங்கை விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மாதவன் சுரேஷ் உள்ளடங்களான அங்கத்தவர்கள் இதற்கு இணங்கியுள்ளனர்.

எனவே, இந்த கூட்டணியானது தேர்தலிலும் தீர்மானம் மிக்க சக்தியாக விளங்கும். இனிவரும் நாட்களில் அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் எமது பயணம் தொடரும்.

ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி சபைத் தேர்தல் என்பவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் இன்று ஆரம்ப கட்டமாக கவனம் செலுத்தினோம்.

மலையகத்தை மையப்படுத்தி செயல்படும் பழமையான இந்த சங்கங்களின் இணைவு, மலையகத்தின் மாற்றமாகவும் அமையும்.” என குறிப்பிட்டார்.

### கிராம சேவக உதவியாளர் பாகுபாடு

# பெண் ஆர்ப்பாட்டம்

■ பு.கஜிந்தன்

நவாலி, வடக்கு ஜே/134 கிராம சேவகர் பிரிவில் கிராம சேவகரின் உதவியாளராக செயல்படும் பெண்ணொருவர், உதவித் திட்டங்களில் பாகுபாடு காட்டுவதாக தெரிவித்து பாதிக்கப்பட்ட பெண் குறித்த கிராம சேவகர் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

உதவித் திட்டங்களை தனக்கு விரும்பியவர்களுக்கு வழங்குவதாகவும், பொதுக் கூட்டங்களுக்கு, பொது அமைப்புகளுக்கு அறிவித்தல் வழங்குவதில்லை என்றும், பொதுவான இடங்களில் கூட்டத்திற்கான அழைப்பு அறிவித்தல் ஒட்டப் படுவதில்லை என்றும், தனக்கு விரும்பியவர்களுக்கு மாத்திரம் தொலைபேசி மூலம் அறிய தருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பான முறைப்பாடு தான் ஏற்கனவே அரசாங்க அதிபரிடம் கொண்டு சென்ற நிலையில் இதற்கு முன்னர் இருந்த கிராம சேவகர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும், புதிதாக வந்த கிராம சேவகரும் ஒரு வருடம் கழிந்த



பின்னர் அந்த பெண்ணின் கருத்துப்படி செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகுபாடுகாட்ட வேண்டாம் என்று தான் பலமுறை கூறி முரண்பட்ட நிலையில், தான் பயங்கரவாதத்தை மீளுருவாக்க செய்யவுள்ளதாக பயங்கரவாத தடுப்பு பிரிவுக்கு மொட்டை கடிதம் மூலம் முறைப்பாடு செய்து, பழிவாங்கும் முகமாக தன்னை பயங்கரவாத தடுப்பு பிரிவு விசாரணைக்கு அழைத்ததாகவும் கூறுகிறார்.

# ஜனநாயகத்தின் 3 தூண்களுக்கும் இடையிலான முரண்பாடு

ஜனநாயகத்துக்கு நான்கு தூண்கள் முக்கியமானவை. சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் ஊடகம் ஆகியனவே இந்த நான்கு தூண்களாகும். இதில், மூன்று தூண்களுக்கு இடையில் முரண்பாடுகள் எழுந்துள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்டு, 2024 செப்டம்பர் 21ஆம் திகதியன்று வாக்களிப்புக்கான திகதி குறித்துள்ள நிலையில், சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று தூண்களுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளது.

பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில், உயர்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தடையுத்தரவை அடுத்தே இந்த முரண்பாடுகள் தோன்றியுள்ளன. இதற்கிடையே ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், முரண்பாடுகளின் தன்மை இன்னுமின்னும் அதிகரித்துள்ளது.

அரசியலமைப்பின் 104 வது பிரிவின் கீழ், பொலிஸ் அதிகாரிகளின் சேவையை பொலிஸ்மா அதிபரின் ஊடாகத்தான் தேர்தல் ஆணைக்குழு பெற முடியும். பொலிஸ் மா அதிபர் இல்லை என்றால், அந்த அதிகாரிகளை எப்படி பெற முடியும்? தேவையான எண்ணிக்கையிலான பொலிஸ் அதிகாரிகளை இந்த வாரம் கோர வேண்டும். பின்னர் கேட்டுப் பெற முடியாது. அந்த நிலையில் தேர்தலை நடத்த முடியாது. எனவே இது மிகவும் முக்கியமான விடயமாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சனிக்கிழமை (27) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜனநாயகத்தின் 3 தூண்களுக்கிடையே இருக்க வேண்டிய தடைகள் மற்றும் சமன்பாடுகள் உட்பட ஒட்டுமொத்த ஜனநாயகக் கட்டமைப்பும் முற்றிலும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மறுபுறம் பாரிய குற்றச் செயல்களால் ஒட்டுமொத்த சமுகமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தின் மூன்று தூண்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்படுமாயின், அது ஜனநாயகத்தை கேள்விக்கு உட்படுத்தி விடும், ஜனநாயக நாடொன்றில் ஜனநாயகம் பேணப்பட வேண்டும் என்றால், தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். நமது நாட்டை பொறுத்தவரையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அவற்றுக்கு அடுத்தபடியாக, ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட வேண்டும். இவையிரண்டும் தேர்தல்களையும் ஒத்திவைக்க முடியாது. அரசியலமைப்பின் பிரகாரம் அவற்றை நடத்தியே ஆக வேண்டும். தேர்தல் ஒன்று, ஜனநாயகத்தின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்றால், பாதுகாப்பு முக்கியமானது. சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துவது பொலிஸாரின் கடப்பாடாகும். அதற்கு பொலிஸ் மா அதிபரின் வகிபாகம் முக்கியமானது.

இவ்வாறான நிலையில், பொலிஸ் மா அதிபரின் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக கடிதமொன்றை எழுதியுள்ளார். நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த தேர்தலை நடத்த வேண்டும். அதற்கு பாதுகாப்பு முக்கியமானது.

ஆகையால், நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும், சட்டவாக்கத்திற்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் முரண்பாட்டை களைந்து ஜனநாயகத்தை உறுதிப்படுத்தல் அவசியமாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.





அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சம் முழுமையாகப் பிரகாசிக்க, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் முழு உலகையும் அரவணைக்கும் அன்பு எனும் ஒளியைப் பாச்ச முயற்சி செய்க! இது கடினமானது இல்லை.

புன்னகை செய்து, விழிகள் மூலம் கருணையுடன் நோக்குக! எதிகளே இல்லாத நிலையில் வாழ்ந்திட முயலுங்கள்.

இயன்றளவு சாதாரண உதவிகளை பிறருக்குச் செய்யத் தயங்க வேண்டாம். எக்காரணம் கொண்டும், சூடான சொற்பதங்களைப் பிரயோகிக்க வேண்டாம்.

தமக்குப் பிடிக்காததை, மற்றொருவருக்குக் கொடுப்பது, நாகரிகமானது அல்ல! தானம் செய்யும்போது கூட, கழித்துவிடும் பொருட்களை வழங்கலாகாது.

பசித்தோருக்கு இயன்றவரை வழங்குவது மேலானது. உடலுக்கு உணவு வழங்குதல், ஒருவரின் ஆன்மாவுக்கே ஆறுதல் அளிப்பது போலாகும்.

எவரையும் நிராகரிக்க வேண்டாம். எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர்கள். யாவரும் செய்யும் சிறு கொடைகள், முழு உலகையும் உயர்த்தும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது

நுவரெலியா - தலவாக்கலை நகரை மையமாகக் கொண்டு பொது போக்குவரத்து சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள், வேன்கள் சில மாறுபட்ட கட்டணங்களை அறவிடுவதாக பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக தலவாக்கலை - வட்டகொட மார்க்கத்தில் சேவையில் ஈடுபடும் சிறிய தனியார் வேன்கள் ஒவ்வொரு பயணியிடமிருந்தும் ரூ 100 ஐயும் அரச மற்றும் தனியார் பேருந்துகள் ரூ.70 ஐயும் போக்குவரத்து கட்டணமாக .அறவிட்டு வருகின்றனர் என தெரிய வந்துள்ளது.

அத்தோடு வேன்களில் பகல் நேரத்திற்கு ரூ.80 உம் மாலை வேலையில் ரூ.100 ஐயும் போக்குவரத்து கட்டணமாக அறவிடப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள போக்குவரத்து கட்டணங்களுக்கு மேலதிகமாக பயணிகளிடமிருந்து அறவிடும் நடத்துனர் மற்றும் உரிமையாளருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– சுஜிதா

### தேர்தலுக்கான அச்சுறுத்தல்

# முடிவடையவில்லை



எம்.எஸ்.எம். ஐயூப்

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த ஜுலை 26 ஆம் திகதி அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியையும் அதற்காக வேட்புமனு தாக்கல் செய்யும் தினத்தையும் அறிவித்தது. அதன்படி அடுத்த (ஆகஸ்ட்) மாதம் 15 ஆம் திகதி வேட்புமனு தாக்கல் இடம்பெறவிருக்கிறது. தேர்தல் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தாம் இத்தேர்தலில் தோல்வி அடையலாம் என்ற பயத்தால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலை ஒத்திவைக்க பல்வேறு தந்திரங்களில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சிகள் கடந்த சில மாதங்களாக குற்றஞ்சாட்டி வருகின்றன.

அந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைக்குமாறு கோரி இம்மாதத்துக்குள் இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டன. அத்தோடு அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பொன்று அவசியமாகும் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றுக்கான சட்டமூலமொன்றையும் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

அது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நாட்களிலேயே சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டியிருக்கும்.

இந்த அரசியலமைப்புத் திருத்தம் ஜனாதிபதித் தேர்தலை பாதிக்கலாம் என்று எதிர்க் கட்சிகள் தொடரந்து கூறி வரவே தேர்தல் முடியும் வரை அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டாம் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தமது அமைச்சின் செயலாளரை கடந்த 18 ஆம் திகதி பணித்தார். ஆனால் அன்றே ஜனாதிபதி அதனை வர்த்தமானியில் பிரசுரிக்குமாறு பணித்தார். அது அன்றே பிரசுரிக்கப்பட்டது.

இதற்கிடையே தேசபந்து தென்னகோன் பொலிஸ் மா அதிபராக நியமித்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட 9 மனுக்களின் பூர்வாங்க விசாரணை முடிவடைந்துள்ளது. அந்நிலையில் அம்மனுக்கள் தொடர்பான விசாரணை முடியும் வரை தென்னகோன் பொலிஸ் மா அதிபர் பதவியில் கடமையாற்ற கூடாது என்று உயர் நீதிமன்றம் கடந்த 24 ஆம் திகதி உத்தரவிட்டது.

அரசாங்கம் அத்தீர்ப்பை ஏற்க மறுத்துள்ளது. அத்தீர்ப்பு சட்டவிரோதமானது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். அது பாராளுமன்ற சிறப்புரிமையை பாவித்து தெரிவிக்கப்பட்ட கருத்து என்றும் முடியுமென்றால் அக்கருத்தை வெளியில் வந்து வெளியிடுமாறும் எதிர்க்கட்சிகள் பிரதமருக்கு சவால் விடுத்துள்ளன.

தென்னகோனை பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி மேற்கொண்ட பரிந்துரைக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான அரசியலமைப்புச் சபையின் விவாதம் கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி நடைபெற்ற போது அச்சபையின் 4 உறுப்பினர்கள் அதனை ஆதரித்தனர். இருவர் அதனை எதிர்த்தனர். மேலும் இருவர் வாக்களிப்பை தவிர்த்துக் கொண்டனர்.

அச்சபையின் உறுப்பினர்களில் குறைந்தபட்சம் ஐவரது ஒப்புதலிலேயேயே ஜனாதிபதி உயர் மட்ட பதவிகளுக்கு எவரையும் நியமிக்க முடியும். ஒரு நியமனத்துக்கு ஆதரவானவர்களினதும் எதிரானவர்களினதும் எண்ணிக்கை சமமாகும் பட்சத்தில் சபையின் தவிசாளரான சபாநாயகர் தமது வாக்கை ஏதோ ஒரு பக்கத்துக்கு அளித்து நியமனத்துக்கான அங்கீகாரத்தையோ, மறுப்பையோ ஜனாதிபதிக்கு தெரிவிக்க முடியும்.

தென்னகோனின் நியமனத்தை பற்றிய விடயத்தில் வாக்களிக்காமல் இருந்த இருவரும் எதிர்த்து வாக்களித்தவர்கள் என்ற அடிப்படையில் ஆதரவானவர்களும் எதிரானவர்களும் சமமாக இருப்பதாக கூறி சபாநாயகர் தமது வாக்கை நியமனத்துக்கு ஆதரவாக அளித்து அரசியலமைப்புச் சபை அந்நியமனத்தை அங்கீகரித்ததாக ஜனாதிபதிக்கு அறிவித்தார்.

இந்த முடிவு பிழையானது என்றும் வேறு காரணங்களை முன்வைத்தும் 9 அடிப்படை உரிமை மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. வாக்களிப்பின் போது நடுநிலை வகித்தவர்களுக்கு அதனை எதிர்க்கும் நோக்கம் இருந்திருந்தால் அவர்கள் நடுநிலை வகிக்காமல் எதிர்த்தே வாக்களித்து இருப்பார்கள் என்பதே அவர்களது வாதமாகும். அந்த வாதத்தை ஏற்றே உயர் நீதிமன்றம் தென்னகோனின் நிமனத்துக்கு கடந்த 24 ஆம் திகதி இடைக்கால தடை விதித்தது.

இப்போதும் சபாநாயகர் தமது நிலைப்பாட்டை நியாயப்படுத்தி கொண்டே இருக்கிறார். இந்த விடயத்தில் தாம் எவ்வித தவறும் செய்யவில்லை என்று அவர் பாராளுமன்றத்தில் கூறினார்.

ஜனாதிபதி அத்தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் ஏற்றுக்கொண்டவரை போல் கருத்து வெளியிடுகிறார்.

தென்னகோனின் நியமனத்தை இடைநிறுத்திய உயர் நீதிமன்றம் விசாரணை முடியும் வரை பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு அறிவித்தது. பொலிஸ் மா அதிபரின் பதவி இடைநிறுத்தப்பட்டுள்ளதே தவிர அவர் பதவி நீக்கப்படவில்லை என்றும் அந்த நிலையில் நீதிமன்றத்தின் கருத்தின் படி தாம் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமித்தால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரான தமக்கு எதிரான தேர்தல் மனுவொன்றுக்கு அது நாளை காரணமாக அமையலாம் என்றும் தாம் இந்த விடயத்திலிருந்து ஒதுங்கி நிற்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

எனவே இப்போது தென்னகோனால் பொலிஸ் மா அதிபராக செயற்படவும் முடியாது. பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என்று ஜனாதிபதியும் கூறுகிறார். எனவே பொலிஸ் மா அதிபரோ பதில் பொலிஸ் மா அதிபரோ இல்லாத நிலைமை நாட்டில் உருவாகியிருக்கிறது. இதை காரணமாக காட்டி தேர்தலை ஒத்திவைக்கவே ஜனாதிபதி முயல்கிறார் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. அதிலும் உண்மை இருக்கலாம் ஏனென்றால் இப்போது ஜனாதிபதியும் பிரதமரும் சபாநாயகரும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நிராகரிப்பதைப் போல் தான் நடந்துகொள்கின்றனர்.

அரசியலமைப்புச் சபை சட்டமன்றத்தின் (பாராளுமன்றத்தின்) ஓர் அங்கம் என்றும் எனவே தென்னகோனின் நியமனத்தை அரசியலமைப்புச் சபை அங்கீகரித்ததை எதிர்த்து தீர்ப்பு வழங்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

நீதிமன்றத்துக்கும் சட்டமன்றத்துக்கும் இடையே மோதல் ஏற்பட்டால் சட்டமன்றம் நீதிமன்றத்தின் கட்டளைகளை ஏற்கத் தேவையில்லை என்று 1991 ஆம் ஆண்டு அப்போதைய சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால் இதற்கு முன்னர் ஜனாதிபதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதம நீதிபதி நிஸ்ஸங்க கருணாரத்னவை உயர் நீதிமன்றத்துக்கு பரிந்துரைத்த போது அதனை அரசியலமைப்புச் சபை நிராகரித்தது. அது சர்ச்சையாகவே ஜனாதிபதி அரசியலமைப்புச் சபை நிறைவேற்றுத்துறையின் அங்கம் என்றும் அச்சபை நிறைவேற்றுத்துறையின் தலைவரான ஜனாதிபதிக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க முடியாது என்றும் வாதிட்டார்.

அரசியலமைப்புச் சபை நிறைவேற்றுத்துறையின் அங்கமா அல்லது சட்டமன்றத்தின் அங்கமா என்பது ஒரு புறமிருக்க அதன் முடிவுகளை சவாலுக்குட்படுத்த முடியாது என்று அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால் 126 ஆவது உறுப்புரைக்கு அமைவாக (அதாவது அடிப்படை உரிமை மனுக்கள் மூலம்) அதன் முடிவுகளை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த முடியும் என்றும் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசபந்து விடயத்தில் அடிப்படை உரிமை மனுக்களே தாக்கல் செய்யப்பட்டன. எனவே அரசியலமைப்புச் சபை தேசபந்துவின் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்கிய முறை பிழையானது என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றம் அவருக்கு இடைக்கால தடை விதித்தமை சட்ட விரோதமானது என்று கூற முடியாது. இந்த நிலையில் இப்போது தேசபந்து விடயத்தில் பிரதம நீதியரசரும் சபாநாயகரும் கலந்தாலோசித்து ஒரு முடிவை எடுக்கலாம் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். உயர் நீதிமன்றம் ஒரு விடயத்தில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி ஆலோசனை வழங்கலாமா? அவருக்கு அதற்கு அதிகாரம் இருக்கிறதா? தேசபந்துவின் நிமனத்துக்கு ஒப்புதல் வழங்குவதில் சபாநாயகர் முறையாக செய்றபடவில்லை என்ற அடிப்படையிலேயே நீதிமன்றம் தேசபந்துவின் நியமனத்துக்கு இடைக்கால தடை விதித்தது.

அதாவது இந்த வழக்கில் சபாநாயகரும் ஒரு பிரதிவாதியாவார். நீதிபதியும் பிரதிவாதியும் கலந்துரையாடி வழக்கு விடயத்தில் முடிவு எடுக்க முடியுமா? அவ்வாறாயின் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய இடைக்கால தீர்ப்பு செல்லுபடியில்லை என்று நீதிமன்றம் ஒப்புக்கொள்ள வேண்டுமா?

தேசபந்துவின் நியமனத்தில் ஜனாதிபதி இவ்வளவு ஆர்வம் காட்டுவது ஏன்? அவரது நியமனத்துக்கு அரசியலமைப்புச் சபையின் ஒப்புதல் முறையாக கிடைக்கவில்லை என்பதை நாம் மேலே விவரித்தோம். அவ்வாறிருக்க அதற்கு அச்சபையின் ஒப்புதல் முறையாக வழங்கப்பட்டதாக சபாநாயகர் ஏன் ஜனாதிபதிக்கு அறிவிகக வேண்டும்?

இப்போது உயர் நீதிமன்றம் அந்த நியமனம் முறையாக இடம் பெறவில்லை என்பதை ஓரளவுக்கு ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் அந்த நியமனத்துக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. அதையும் ஏற்க ஜனாதிபதி தயாரில்லை போல் தான் தெரிகிறது. அதனால் தான் இவ்விடயத்தை சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்தாலோசித்து தீர்க்க வேண்டும் என்கிறார்.

அதேவேளை தீர்ப்பை ஏற்க விருப்பம் இல்லாததால் தான் இத்தீர்ப்பின் படி தாம் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமித்தால் தமக்கு எதிராக நாளை தேர்தல் மனுவொன்று தாக்கல் செய்யப்படலாம் என்று கூறுகிறார். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் தான் அவ்வாறான தேர்தல் மனுக்கள் தாக்கல் செய்யப்படலாம். அதேவேளை, அவர் பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமித்தால் அதன் மூலம் அவர் நீதிமன்ற உத்தரவையே நிறைவேற்றுகிறார்.

அதற்கு எதிராக தேர்தல மனுத தாக்கல் செய்யலாமா? தாக்கல் செய்தாலும் அது தோல்வியிலேயே முடியும். இதனால் தான் பொலிஸ் மா அதிபர் விடயத்தில் குழப்ப நிலையை உருவாக்கி ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போட ஜனாதிபதி முயல்வதாக எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

# Kitchen & Bedroom இனால் புதிய இலச்சினை அறிமுகம்



இடவசதி திட்டமிடல் மற்றும் உள்ளக வடிவமைப்பை கட்டியெழுப்பல் போன்றவற்றில் கீர்த்தி நாமத்தை பெற்ற, பல தசாப்த கால அனுபவத்தையும் கொண்ட *Kitchen & Bedroom*, அண்மையில் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது. தமது வாழிடப் பகுதியில் எதிர்பார்க்கும் சொகுசான வசதிகளை நிறைந்திருக்கச் செய்வது எனும் தொனிப்பொருளுக்கமைய இந்த புதிய இலச்சினை அமைந்துள்ளது.

நவநாகரீகத்தைப் போலவே, உள்ளக அலங்கார வடிவமைப்பு தொடர்பிலும் அதிகளவு பேசப்படுவதுடன், கவனம் செலுத்தப்படுகின்றது. அதற்கு அப்பால் சென்று, நபர் ஒருவரின் உணர்வுகள் மற்றும் உளவியல் நலனிலும் உள்ளக அலங்கார வடிவமைப்பு தாக்கம் செலுத்துகின்றது. சிறந்த வடிவமைப்புகளுடனான, பிரத்தியேகமான உள்ளகப் பகுதியை கொண்டிருப்பது என்பது, சௌகரியமான, சிறந்த செயற்திறனைக் கொண்ட, கலையம்சங்கள் நிறைந்த வாழிடத்தை வழங்குவதாக அமைந்துள்ளது.

*Kitchen & Bedroom* ஐச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த அலங்கார வடிவமைப்பாளர்கள் மற்றும் கலைஞர்களினூடாக, விஞ்ஞானத்தையும், கலையையும் ஒன்றிணைத்து, வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதுடன், வாடிக்கையாளர்களின் பகுதிகளில் இவை பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், 90 சதவீதத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் தமது வெவ்வேறு உள்ளக அலங்காரத் தேவைகளுக்காக மீண்டும் மீண்டும் அவர்களை நாடுவதனூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

*Kitchen & Bedroom* குரூப் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. மொஹமட் ருஷ்மி ஸாகுவாஃப் குறிப்பிடுகையில், "உள்ளக அலங்கார வடிவமைப்பு மற்றும் இடவசதி திட்டமிடல் ஆகியவற்றில் முன்னோடியாக திகழ்வதனூடாக, தொழிற்துறையின் புதிய மற்றும் பிந்திய தெரிவுகளை நாட்டில் அறிமுகம் செய்வதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், எமது புதிய இலச்சினை அறிமுகம் அமைந்துள்ளது. சிறு சிறு விடயங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துகின்றமை வாடிக்கையாளர்களால் பெருமளவு விரும்பப்படுகின்றது. ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் எம்மை உயர்ந்த நிலையில் பேணுவதற்கு இது உதவியுள்ளது. நாம் தூர நோக்குடைய திட்டங்களை கொண்டுள்ளதுடன், ஒரு நேரத்தில் ஒரு படியை மாத்திரம் முன்னெடுக்க எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

சமையலறை மற்றும் வாழிட பகுதிகளில் ஐரோப்பிய தரத்தை கொண்டு வருவதற்கான உள்ளக அலங்கார வடிவமைப்பு வரைபு முதல் கலையம்சங்கள் வரை அனைத்தையும் வழங்குவதுடன், இரு பரிமாண மற்றும் முப்பரிமாண அலங்காரங்களுடன் நிபுணத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்து, உயர் வர்ண சமநிலைப்படுத்தல் மற்றும் ஒளியூட்டல் மற்றும் மின் கட்டமைப்பு அலங்காரங்களை வழங்கி, அணியினரால் தோற்றத்தில் சிறந்த பகுதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

"இந்த புதுப்பிக்கப்பட்ட பயணத்தை ஆரம்பிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் வகையில், *FMCG* மற்றும் நுகர்வோர் சாதனங்கள் துறைசார் செயற்பாடுகளிலிருந்து *Kitchen & Bedroom* வரை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நிர்வாக செயற்பாடுகளில் ஈடுபட்ட அனுபவத்தைக் கொண்டு, உள்ளக பகுதிகளை மேம்படுத்தி, உணர்வு ரீதியில் மேம்படுத்தல்களை மேற்கொள்ள முடிந்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்." என பிரதம செயற்பாட்டு அதிகாரி முஹம்மட் நவுபல் நூர்தீன் குறிப்பிட்டார். இவர், கூட்டாண்மைத் துறையில் ஆய்வாளர் மற்றும் கூட்டாண்மை பயிற்றுவிப்பாளர் ஆகிய நிலைகள் அடங்கலாக நான்கு தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்தை கொண்டுள்ளார்.

*Kitchen & Bedroom* இன் குரூப் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி. மொஹம்மட் ருஷ்மி ஸாகுவாஃப்(வலம்) மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி முஹம்மட் நவுபல் நூர்தீன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



# "தாங்களாகவே தகர்த்தெறியவும்"

**சத்தியேஸ்வரன் சுபிசங்கரி**

**நான்காம்வருடகல்வியியல், சிறப்புக் கற்கைமாணவி, கல்விபிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.**

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ் வையகம் தலைக்கும்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க ஆணும் பெண்ணும் சமமென்று ஆணித்தரமாக அவர் அன்று ஓங்கி குரல் கொடுத்திருந்தாலும், இன்றைய காலகட்டத்தில் அது அர்த்தமற்றுவரும் வார்த்தைகளாகவே பயன்பாட்டிற்கு பயனின்றி ஒலிக்கின்றதை மாத்திரமே என் சமூகத்தால் கேட்க முடிகின்றது. நவீன வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பாதிக்கும் பல்வேறு சவால்களை இன்றைய சமூகம் நாளுக்கு நாள் எதிர்கொண்ட வண்ணமே கடந்து கொண்டிருக்கின்றது.

இந்த வரிசையிலே சமூகத்தில் முடிவின்றி தொடர்ந்த வண்ணமே அரங்கேற்றப்படுகின்ற பெண்களுக்கு எதிரானவன் முறைகளை நாளாந்தப் போக்கில் எம்மால் கண் கூடாக பார்க்கவும் முடிகின்றது. இணைத்தளங்கள், சமூகவலைத்தளங்கள் மாத்திரமன்றி, நாளாந்தம் வெளிவருகின்ற பத்திரிகையின் எந்தபக்கத்தை புரட்டினாலும் ஏதோ ஒரு மூலையில் பெண்களின் அவலநிலை பேசப்பட்டிருப்பது எம்மை மன வேதனையில் ஆழ்த்துகின்றதென்பதே மெய்.


ஏழறிவு படைத்த மனிதனாக நாம் முடிசூட்டப்பட்டு சமூகத்தின் மத்தியில் வலம் வந்தாலும், இரு கரங்கள் இருந்தும்,பெண்கள் மேல் வீசப்பட்டிருக்கும் இக்கொடூர வலைகளை எம்மால் கிழித்தெறிந்து அவர்களை சுதந்திரப் போக்கில் விடுதலை செய்யமுடியாத நிர்ப்பந்தத்தில் தள்ளப்பட்டுகின்றோம். எண்ணில் அடங்காத வன்முறைகள் இன்று பெண்களின் முன் ஊசலாடும் போக்கே சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்றது.

பெண் பிள்ளைகளைப் பெற்ற தந்தையர்களின் தவிப்பானது, அப்பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிய எண்ணமே கேள்விக்குறியாக மாறிவிட்டது என்று தான் கூறவேண்டும். அச்சம் என்ற முதல் வார்த்தையிலேயே பெண் அடிமையாக்கப்பட்டுவிட்டாள். ஆண், சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவிக்கொள்ளலாம் என்பர்.

மறுபுறத்தில் கல் என்றாலும் கணவன், புல்லென்றாலும் புருஷன் என்றார்கள். ஆண் சுதந்திரமானவன்; பெண் சுதந்திரம் அற்றவள். ஆண் எதைசெய்தாலும் தவறில்லை. ஆனால்,பெண் ஆணுக்கு எதிராக, நான்கு குணங்களுக்கு மாறாக எதைசெய்தாலும் பிழை என்றார்கள்.

பெண் பிறந்ததிலிருந்தே சுமையாகிறாள். பெண்ணை பெற்றவர்கள் அவளை ஒருவனின் கையில் ஒப்படைக்கும் வரை பெரிய பொறுப்பை தலையில் கட்டி வைத்திருப்பது போல் அவதிப்படுகின்றனர். இவற்றுக்கு அடிப்படையாக அமைந்தது அவளுடைய கரு வளமே ஆகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையானது உலகெங்கும் 'பெரும் தொற்று நிழல்' போன்று பெண்களை விடாமல் துரத்திக் கொண்டே வருகின்றது. அந்த வரிசையிலே மலேசியாவில் சேர்ந்த குடும்பப் பெண்ணான ஈசாவினுடைய தற்கொலை சம்பவமானது டிக்டாக் சமூகவலைத்தளங்களில் பரவலாக ஓடிக்கொண்டிருக்கும் பரிதாபமான செய்தியாகும்.




அதுமட்டுமின்றி குறித்த பகுதியில் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் தொலைபேசியினை களவு செய்த 27 வயதான யுவதியின் புகைப்படங்கள், அவரின் காணொளிகளை பதிவிட்டு அவரினை மன உளைச்சலுக்கு உட்படுத்தி அவர் தனது உயிரினை மாய்த்துக் கொண்ட சம்பவமும், அதனைப் போன்றே ஆறு வயதுடைய சிறுமியை தொடர்ந்தும் ஆறு மாதங்களாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி வந்த தந்தையின் செயல்பாடுகள் என பல்வேறு வன்முறை பக்கங்களை நாம் அறிந்து கொண்டுதான் இருக்கின்றோம்.

சமீபகாலத்தில் பெண்களை தவறான காணொளிகள் புகைப்படங்கள் பல வலைத்தளங்களின் ஊடாக பதிவிட்டு அவர்களை மன உளைச்சலுக்கு உட்படுத்தி, அவர்களின் உயிரினை காவு கொண்ட செய்திகள் அன்றாடம் அதிகரித்த வண்ணமே இருக்கின்றமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

மேலும் இது தவிர பெண்களின் பொய்யான தவறான ஆபாச புகைப்படங்கள் காணொளிகளை சமூகவலைத்தளங்களின் ஊடாக பரிமாற்றம் செய்யப்படுவதனை தடுக்கும் முகமாக அரசினால் தற்போது புதிய சட்டதிட்டங்களின் ஊடாக அவர்களின் தொலைபேசி விளக்கங்களின் ஊடாக பரிமாற்றம் செய்யப்படுவதனை கண்டுபிடித்து அவர்களுடைய தொலைபேசி முடக்கப்பட்டு, அவர்களுக்கான தண்டனை வழங்கும் புதியசட்டமும் பெண்களுக்கு எதிரானவன் முறையை குறைக்க சமீப காலத்தில் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன்,பெண்களுக்கு எதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்புநாள் ஆண்டுதோறும் நவம்பர் 25ஆம் நாள் அன்று உலகெங்கணும் கொண்டாடப்பட்டு வரும் ஒரு சிறப்பு நாள் ஆகும்.

இருந்த போதிலும், இன்றைய சமூகத்தின் அதி தீவிரமான அறிவுத்தேடல்,பொருள் நோக்கிய சிந்தனை போன்றவற்றின் காரணமாக ஆண்,பெண்,சிறுவர்கள் என்றபேதமின்றி, யாவரும் கற்பதற்கும் உழைப்பதற்கும் உரியவர்கள் என்ற சிந்தனை மேலோங்கி வருகின்றது.

குடும்பத்தின் வளர்ச்சியிலும் கல்வியிலும் அதிக கவனம் கொண்டவர்களாக கூடிய பொறுப்புணர்ச்சியுடன் பெண்கள் செயற்படுகின்றனர். தொழில்புரியும் பெண்கள் தொடர்பான தவறான எண்ணங்கள், சிந்தனைகள் மாற்றப்பட்டு வருகின்ற போதிலும், சில சமூகங்களில் இத்தகைய முன்னேற்றகரமான சிந்தனைகள் சரியாக அங்கீகரிக்கப்பட முடியாத நிலையும் உண்டு.

'கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று கல்வியின் முக்கியத்துவத்தை வள்ளுவன் அன்று இரண்டடியில் கூறினாலும், இவ்வுலகில் பெண்கள் கௌரவமாகவும், எவ்வித வன்முறைகளும் இன்றி, கம்பீரமாகவும் வாழ வேண்டுமெனில் இவர்கள் கையில் எடுக்கும் ஆயுதம் கல்வி தான்.

சமுதாயமானது பெண்களுக்கு எதிராக செய்யப்படும் தவறுகளை உணர்ந்து முன்னேற்றம் அடையவேண்டுமெனில், பெண்களுக்கான சுதந்திரம், கல்வி, சமத்துவம், சகோதரத்துவம் என்பன முறையாக பேணப்பட வேண்டும்.

'பெண்கள் ஒரு நாட்டின் கண்கள்' ஒரு நாடானது முன்னேற்றம் அடையப்பட வேண்டுமெனில் பெண்களின் கல்வியிலேஅதன் நிலை தங்கி உள்ளது.

இன்று நாட்டில் பெரும் பதவிகளில் பெண்களின் பங்களிப்பு உள்ளது. முன்னைய காலத்திலேயே பெண் அடிமைத்தனம் அதிகளவாக காணப்பட்டது.

ஆனால் தற்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக வெளியுலகுக்கு வந்து சகல துறைகளிலும் தன் சாதனைகளை சாதிப்பவர்களாகவும், வெளிக்காட்டக் கூடியவர்களாகவும் சுதந்திரத்துடன் திகழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் பெண்களின் இந்த முன்னேற்றத்துக்கு கல்வியின் முக்கியத்துவம் மிகப்பெரிய வெற்றியாக அமைந்துள்ளது. அண்மை காலங்களில் பெண்கள் பல துறைகளிலும் சம உரிமையுடன் கல்வி கற்று வருகின்றனர்.

இதனை சமூகம், அறிவு ரீதியாக உணர்ந்து செயற்படத் தொடங்கியுள்ளது. பெண் கல்வியை ஊக்குவிக்க பல முயற்சி பணிகள் இருந்தாலும், அதற்கு எதிராகவும் பலபக்கங்களும் இருக்கத்தான் செய்தன."

'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதெற்கு?','பெண் புத்திபின் புத்தி' என பல்வேறு சமூகங்கள் பெண்களை இழிவாக நினைத்தாலும், இன்று பெண்களின்றி ஓர் அணுவும் அசையாது என்ற அளவிற்கு பெண்களின் திடமான முயற்சியானது இன்று உலகையே ஆளும் ஒரு வல்லமை படைத்த சக்தியாக மாறியுள்ளது.

இருந்தும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் நாளாந்தம் தொடர்ந்து கொண்டேதான் செல்கின்றன.

பெண்கள் கல்வி கற்பதனால் பெண்களுக்கு எதிரான துஸ்பிரயோகங்கள், வன்முறைகள், கொடுமைகள் என்பன பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தும்.

பெண்கள் கல்வி எனும் ஒளி பெற்றால் நாடு சிறந்தோங்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை. அதாவது சரியான காலங்களில் பெண்களுக்கு கல்வியானது கிடைக்கப்பெறுவதனால் உடல் சார்ந்த,சமூகம் சார்ந்த உரிமைகளை அறிந்து கொள்வதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து போராடும் துணிச்சலும் இவர்களுக்கு ஏற்படுகின்றது.

அதுமட்டுமின்றி அறியாமை நீங்குவதுடன், நாட்டில் சமுதாய ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட இது வழிவகுக்கும். குழந்தை திருமணங்களின் சதவீதம் குறைவடைவதுடன், அவர்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கும்.

இதனால் பொருளாதார ரீதியில் அவர்கள் முன்னேற்றம் அடைவர்.


இதனால் சமூகத்தின் மத்தியில் ஆண் - பெண் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி பெண்களும் சமூகத்தில் தலைமை தாங்கும் ஆணிவேராக செயற்படுவர். பெண் அடிமைத் தனத்தை இல்லாதொழித்து பெண்களுக்கான முழு சுதந்திரத்தையும் கொடுத்து' ஆணுக்கு நிகரானவள் பெண்'என்ற சமூக உரிமையை வழங்கி பெண்களை போற்ற வேண்டும்.

முதலில் சமூகத்தில் பெண்களும் முதன்மையானவர்கள் முக்கியமானவர்கள் என்பதனை அனைவருக்கும் முதலில் உணர வேண்டும். அவர்கள் எதிலும் எவ்வித பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டும். அதற்கு ஆணும், பெண்ணும் சமவென்று சமூகத்தின் மனதில் ஆழமாய் பதிந்தால் மாத்திரமே நாடும் வீடும் வளம் பெற முடியும்.

அந்தவகையில்,பெண் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் அதன் மூலம் ஏற்படும் சமூக, பொருளாதார, வளர்ச்சி போன்றவை தொடர்பான சமூக ஆதரவை திரட்டும் நோக்குடன் கல்வி நிறுவனங்களும் அரசாங்கங்களும் செயற்பட வேண்டும். கிராமிய மக்களிடையே பெண் மாணவர்களின் கல்வி நிலை தொடர்பான பெற்றோர் அக்கறையின்மையை நீக்கும்போது பெண் மாணவர்களின் கல்விநிலை உயர்வடையும்.

பெண்மாணவர்களுக்கும் கல்விக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைப்பதற்காக பெண் மாணவர்களின் கல்வியை துரிதப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் செயற்பட வேண்டும். பெண் மாணவர்களை கல்வியில் மாத்திரமின்றி பல துறைகளிலும் அடிமைப்படுத்தாமல் அவர்களுக்கானசமஉரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பவற்றை வழங்கி அவர்களையும் மதித்துபோற்றவேண்டும்.

'ஊது குழலை கையில் எடுக்கும் பெண்கள் எழுது கோலை கையில் எடுக்க வேண்டும்'அவர்கள் உலகின் சரித்திரத்தை தன் கையொப்பமாக மாற்றி எழுதி, தடம் பதிக்க வேண்டும். தங்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகளை தாங்களாகவே தகர்த்தெறிய வேண்டும்.



ரஷ்யா

ரயில் தடம்புரண்டதில்

# 140 பயணிகள் படுகாயம்



தெற்கு ரஷ்யாவில் 800க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் சென்ற ரயில், ட்ரக் மீது மோதியதில் 140 பேர் காயமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 8 ரயில் பெட்டிகள் தடம் புரண்டதாக ரஷ்ய ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ள நிலையில், விபத்தில் 3 குழந்தைகள் மற்றும் இரண்டு ஊழியர்கள் உட்பட குறைந்தது 55 பேர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுத்போர்ட்

கத்திக்குத்தில்

# சிறுவர்கள் இருவர் பலி



பிரித்தானியாவில் உள்ள பகுதியொன்றில் இடம்பெற்ற கோடை கால யோகா மற்றும் நடன வகுப்பில் நுழைந்த இளைஞர் ஒருவர் நடத்திய கத்திக்குத்தில் 2 சிறுவர்கள் திங்கட்கிழமை (29)பகல் 12 மணியளவில் சவுத்போர்ட் (Southport) பகுதியில் கொல்லப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், இந்தத் தாக்குதலில் காயமடைந்த 9 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு அவர்களில் 6 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். அதேவேளை, சிறுவர்களை காப்பாற்ற முயன்ற இருவரும் காயமடைந்துள்ளதோடு தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொடூர தாக்குதலை மேற்கொண்ட இளைஞனை பொலிஸார் சம்பவ இடத்திலேயே சுற்றிவளைத்து கைது செய்ததையடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞன் மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலம்பியா

வீட்டு அழைப்பு மணியால்

# அபராதம்



கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் பகுதியில் வீட்டு அழைப்பு மணியை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் தம்பதியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் கதவில் பயன்படுத்தப்படும் அழைப்பு மணியை குறித்த தம்பதியினர் அயலவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அயலவர்களை இழிவுபடுத்தும் வகையில் குறித்த நபர்கள் ஓசை எழுப்பியும் தூற்றியும் உள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இந்நிலையில், பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் குறித்த தம்பதியினருக்கு 900 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், தவறான மொழிப்பிரயோகம் மற்றும் கூச்சலிடல் போன்ற செயற்பாடுகளில் இந்த தம்பதியினர் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு

நிலச்சரிவுக்கு தமிழகம் சார்பில்

# 5 கோடி நிவாரணம்



கேரள மாநிலத்தில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு சார்பில் ரூ. 5 கோடியை வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

கேரள மாநிலத்தில் தொடர்ந்து பெய்துவரும் பருவமழையின் காரணமாக, வயநாடு மாவட்டம் முண்டகை என்ற இடத்தில், செவ்வாய்க்கிழமை (30) நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்நிலையில், மீட்பு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் போதே, அங்கிருந்து 2 கி.மீ., தொலைவில் உள்ள சூரல்மலை என்ற இடத்தில், நிலச்சரிவு ஏற்பட்டது. அடுத்ததாக மேப்பாடி பகுதியிலும் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 63 பேர் பலியாகியுள்ள நிலையில், 100க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 400க்கும் மேற்பட்ட வீடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நிலச்சரிவில் சிக்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால், பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்ற அச்சம் நிலவுகிறது.

நிலச்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனையொட்டி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத் தேவையான உதவிகளை தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கிட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவில் கேரளாவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ரூ. 5 கோடியை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் கேரள அரசுக்குத் துணையாக பணியாற்றிட தமிழ்நாட்டிலிருந்து இரண்டு மூத்த ஐ.ஏ.எஸ். ஆதிகாரிகள் தலைமையில் மீட்புக் குழுவினரை உடனடியாக அனுப்பிடவும் உத்தரவிடப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

கொல்கத்தா

காதலனுடன் சேர்ந்து

# தாயைக் கொலை செய்த சிறுமி

மேற்கு வங்க மாநிலத்தில் 14 வயது சிறுமியும் அவரது காதலனும் சேர்ந்து சிறுமியின் தாயைக் கொலை செய்து நாடகமாடியுள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது.


மேற்கு வங்கத்தின் தலைநகரான கொல்கத்தாவைச் சேர்ந்த 54 வயது பெண் ஒருவர் தன் கணவன் மற்றும் மகளுடன் பெஹாலா பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் கடந்த ஜூன் 6ஆம் திகதி திடீரென உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. தனது மனைவி உயிரிழந்ததும் கடும் மன உளைச்சலில் இருந்த சிறுமியின் தந்தை கடந்த 27ஆம் திகதி தனது மனைவியின் இறப்பு குறித்து அண்டை வீட்டு நபர் ஒருவரிடம் பேசியுள்ளார்.

அப்போது தனது மனைவியின் இறப்பு இயற்கையானது அல்ல எனவும் தனது மகள் தான் அவரைக் கொன்றுவிட்டார் எனவும் கூறியுள்ளார். இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

உடனே விரைந்து சென்ற பொலிஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்டதில், பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த சிறுமியும் அவரது காதலனான மற்றொரு சிறுவனும் சேர்ந்து அவரது தாயைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பரிஸ் 2024: வெளியேறிய நடால்

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான தனிநபர் டென்னிஸ் போட்டிகளிலிருந்து ஸ்பெய்னின் ரஃபேல் நடால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை (29) நடைபெற்ற சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச்சுடனான இரண்டாவது சுற்றுப் போட்டியில் 1-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்தே ஒலிம்பிக்கிலிருந்து நடால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை ஆண்களுக்கான 100 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சல் போட்டியின் அரையிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெற இலங்கையின் கைல் அபேசிங்க தவறியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற தகுதிகாண் போட்டிகளிலிருந்து 80 பேரில் முதல் 16 பேர் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறுவரென்ற நிலையில் போட்டித் தூரத்தை 51 செக்கன்கள் 42 மில்லி செக்கன்கள் கடந்த அபேசிங்க 54ஆம் இடத்திலேயே தரப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில், ஏற்கெனவே ஆண்களுக்கான தனிநபர் பூப்பந்தாட்டத்தில் தனது முதலாவது குழு ஜி போட்டியில் தோற்ற இலங்கையின் விரேன் நெட்டசிங்க ஸ்பெய்னின் பப்லோ அபியானுடனான போட்டியில் 9-21, 19-21 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து ஒலிம்பிக்கிலிருந்து வெளியேறினார்.

இதேவேளை பதக்கப் பட்டியலில் 6 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் ஜப்பான் காணப்படுகின்றது. 5 தங்கம், 8 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் பிரான்ஸும், 5 தங்கம், 5 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் சீனாவும், 5 தங்கம், 4 வெள்ளிப் பதக்கங்களுடன் நான்காமிடத்தில் அவுஸ்திரேலியாவும் காணப்படுகின்றன. 5 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் தென்கொரியா காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண ஆயுர்வேத வெற்றிக் கிண்ணத் தொடர்

# கல்முனை சம்பியன்



நியாஸ் ஆதம்

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆயுர்வேத நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்பட்ட “கிழக்கு மாகாண ஆயுர்வேத வெற்றிக் கிண்ணம் - 2024” கிரிக்கெட் தொடரில் கல்முனை பிராந்திய ஏ அணி சம்பியனானது.

ஆரையம்பதி ஏசியன் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்ற கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவிலிருந்து இரண்டு அணிகளும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவிலிருந்து இரண்டு அணிகளும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவிலிருந்து ஒரு அணியுமாக மொத்தம் ஐந்து அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸை வென்றே கல்முனை பிராந்திய ஏ அணி சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை வலய ஏ அணி, 12 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், டிரோசன் 67, புஹாரி 39 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 146 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சுப்பர் கிங்ஸ் 12 ஓவர்கள் நிறைவில் 126 ஓட்டங்களையே பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், டொக்டர் சபீர் 32, கிருபாகரன் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.



# வாள்வீச்சில் கர்ப்பிணி

பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக் போட்டிகளில் ஏழு மாத கர்ப்பிணியாக இருக்கும்போது பங்கேற்றதாக எகிப்திய வாள்வீச்சு வீராங்கனையாக நடா ஹஃபீஸ் திங்கட்கிழமை (29) தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கான தனிநபர் வாள்வீச்சின் தனது முதலாவது போட்டியில் வென்ற 26 வயதான ஹஃபீஸ், இறுதி 16 பேருக்கான சுற்றுப் போட்டியில் தோற்று வெளியேறியிருந்தார்.

# தகுதி பெறத் தவறிய கைல் அபேசிங்க




பிரான்ஸில் நடைபெற்று வரும் பரிஸ் 2024 ஒலிம்பிக்கின் ஆண்களுக்கான 100 மீற்றர் பிறீஸ்டைல் நீச்சல் போட்டியின் அரையிறுதிப் போட்டிகளுக்கு தகுதி பெற இலங்கையின் கைல் அபேசிங்க தவறியுள்ளார். தகுதிகாண் போட்டிகளிலிருந்து 80 பேரில் முதல் 16 பேர் அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெறுவரென்ற நிலையில் போட்டித் தூரத்தை 51 செக்கன்கள் 42 மில்லி செக்கன்கள் கடந்த அபேசிங்க 54ஆம் இடத்திலேயே தரப்படுத்தப்பட்டிருந்தார்.

புத்தளத்தில் அருகி வரும் கரப்பந்தாட்டத் துறையை

# ஊக்குவிக்க நடவடிக்கை

எம்.யூ.எம். சனூன்



புத்தளத்தில் அருகி வரும் கரப்பந்தாட்ட விளையாட்டுக் கலாசாரத்தை மீண்டும் புத்துயிரூட்ட சாஹிரா பழைய மாணவர் குழுக்கள் அணி சேர்ந்து வருகின்றனர்.

கல்லூரி மாணவர் கரப்பந்தாட்ட அணியை, பழைய மாணவரை உள்ளடக்கிய டாஸ் கேம் அணிகளை பயிற்றுவித்து பலப்படுத்தவும், புத்தளம் நகருக்கே உரித்தான பீல்ட் கேம் மற்றும் பல்வகைமை கொண்ட கரப்பந்தாட்ட அணிகளை ஊக்குவிக்கும் நோக்கில் விஷேட கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

சாஹிரா பழைய மாணவர் குழுக்கள் மத்தியில் தொடர்களை நடாத்தி எதிர்வரும் காலத்தில் சாஹிரா வாளாகத்தில் கரப்பாந்தாட்ட அரங்கை நிர்மாணிப்பதற்கான பணிகளை முன்னெடுக்கவும் தீர்மாணிக்கப்பட்டது.

சாஹிரா பழைய மாணவர் குழுக்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்த இந்த சந்திப்பின் அடுத்த நகர்வாக கல்லூரியின் அதிபர் தலைமையில், ஏனைய எல்லா பழைய மாணவர் குழுக்களையும் உள்ளடக்கிய சாஹிரா வொலிபோல் அமைப்பு உருவாக்கத்துக்கான முன்மொழிவும் செய்யப்பட்டது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 31, ஜூலை 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.